[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூன் 6

நிதிக் குழுவின்மூலம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலும் 14-வது நிதிக் குழு காலத்தில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநில அரசு சந்தித்து வரும் வருவாய்ப் பற்றாக்குறையையும் நாம் கவனமாகக் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 18,370 கோடி ரூபாய் எனவும், 2018-2019 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 19,374 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாநில அரசு பெற்று வரும் வரி வருவாயைக் கொண்டுதான் மாநில நிருவாகத்தை நடத்தி, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய நிலை மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடும். கேரளாவின் சூழ்நிலை வேறு, நமது சூழ்நிலை வேறு. எனவே, கேரளா வரிக் குறைப்பு செய்ததுபோல் நாமும் செய்ய முடியுமா என்பதைக் கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். எனினும், இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசனை செய்து, சூழ்நிலைக்கேற்ப முடிவு எடுக்கப்படும் என்பதை எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு தலைவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் 12-00

6. கவன ஈர்ப்பு

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

2018 ஜூன் 6]

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ன்படியும், தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் (NCTE) வழிகாட்டுதலின்படியும், பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு, ஆசிரியர் பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியுடன், ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசு/அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு இத்தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும். அதனடிப்படையில், அரசாணை (நிலை) எண் 181, ப.க. (சி2) துறை, நாள் 15-11-2011-ல், ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்துவதற்கான முகவாண்மையாக ஆசிரியர் தேர்வு வாரியம் நியமிக்கப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்படுகிறது. இத்தகுதித் தேர்வு, தாள் I-ல் இடைநிலை ஆசிரியர்களும், தாள் II-ல் பட்டதாரி ஆசிரியர்களும் தேர்ச்சி பெறவேண்டும். இத்தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் தகுதிச் சான்று ஏழு ஆண்டுகள் வரை செல்லத்தக்கதாகும்.

மேற்கண்ட அரசாணையின்படி, ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண் 60% (90 மதிப்பெண்கள்) என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் பணிநாடுநர்களது கல்வித் தகுதியில் பெற்ற மதிப்பெண்களுக்கு 40 விழுக்காடும் (Weightage Mark) சேர்த்து 100 விழுக்காட்டிற்கு வெயிட்டேஜ் மதிப்பெண் கணக்கிடுவதற்கு

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2018 ஜூன் 6

வழிகாட்டி நடைமுறைகள் அரசாணை (நிலை) எண் 252, பள்ளிக் கல்வித் துறை, நாள் 5-10-2012-ல் வெளியிடப்பட்டது. அதன்படி, கல்வித் தகுதிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

இடைநிலை ஆசிரியர் கல்வி தகுதிக்கான வெயிட்டேஜ்

மேல்நிலைப் பள்ளி தேர்வு	-	15 மதிப்பெண்
பட்டயச் சான்று தேர்வு	-	25 மதிப்பெண்

பட்டதாரி ஆசிரியர் கல்வி தகுதிக்கான வெயிட்டேஜ்

மேல்நிலைப் பள்ளி தேர்வு	-	10 மதிப்பெண்
இளங்கலைப் பட்டம்	-	15 மதிப்பெண்
இளங்கலை ஆசிரியர் பட்டம்	-	15 மதிப்பெண்

மேற்கண்ட கல்வித் தகுதிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண்கள் தேர்வர்கள், மேல்நிலைப் பள்ளி தேர்வு' இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் ஆகிய தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் விழுக்காடு 50-க்கு குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மற்றும் 50-லிருந்து 100 விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்களின் மதிப்பெண்' 10 விழுக்காடு ஏற்ற தர வரிசையாகப் பிரிக்கப்பட்டு, அதற்கேற்றவாறு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

மேற்கண்ட ஆணைகளைப் பின்பற்றி, 2012 ஆம் ஆண்டில் இருமுறை தகுதித் தேர்வு நடத்தப்பட்டது. மேலும், 2013 ஆம் ஆண்டிற்கான தகுதித் தேர்வு அறிவிக்கையிலும் தகுதி மதிப்பெண்கள் 60% என்றே அறிவிப்பு செய்யப்பட்டு, தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டன. இட ஒதுக்கீட்டு பிரிவினர்களின் (BC, BCM, MBC / DNC, SC, ST, SCA & PwD) பலவிதமான கோரிக்கைளின்பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 3-2-2014 அன்று, சட்டமன்றப் பேரவையில் இவ்வகை பிரிவினருக்கு ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதி மதிப்பெண்ணில் 5 சதவீதம் மதிப்பெண் தளர்வு அளிக்க அறிவிப்பு

வெளியிடப்பட்டு, அரசாணை (நிலை) எண் 25, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள் 6-2-2014-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதனால், ஆசிரியர் தகுதித் தேர்வு 2013-ல், தாள்-1 மற்றும் தாள்-2-ல் சுமார் 43,000 தேர்வர்கள் கூடுதலாகப் பயன்பெற்றுள்ளனர்.

மேற்கண்டவாறு பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் தெரிவு செய்வதற்கு, அவர்கள் கல்வித் தகுதிக்கான 40 விழுக்காடு வெயிட்டேஜ் மதிப்பெண்ணைக் கணக்கிடுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை குறித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 252, பள்ளிக் கல்வித் துறை, நாள் 5-10-2012 மற்றும் ஆசிரியர் தகுதி தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண்ணில் 5 விழுக்காடு மதிப்பெண் தளர்வு செய்வதற்கு வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 25, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறைத், நாள் 6-2-2014-ஐ எதிர்த்தும் மற்றும் 5 சதவிகித மதிப்பெண் குறைப்பை ஆசிரியர் தகுதித் தேர்வு-2012-ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்தேதியிட்டு நடைமுறைப்படுத்தவும், சென்னை மற்றும் மதுரை உயர் நீதிமன்றங்களில் நீதிப் பேராணை மனு எண் 5590/2014 W.P (MD) No. 4558/2014 & 4667/2014 உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டதில், சென்னை மற்றும் மதுரை கிளை உயர் நீதிமன்றங்களில் தனித்தனியாக இருவேறு வகையான தீர்ப்புகள் பெறப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை எண் 5590/2014 உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் 29-4-2014-ல் பின்வருமாறு தீர்ப்பு அளித்துள்ளது:

- ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்ணில் இட ஒதுக்கீட்டு பிரிவு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவீதம் மதிப்பெண் தளர்வு அளித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 25, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள் 6-2-2014 செல்லத்தக்கதாகும்.

- 2012-ல் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இவ்வரசாணையினை முன்தேதியிட்டு நீட்டிக்கக் கோரும் மனுதாரர்களின் கோரிக்கையினைத் தள்ளுபடி செய்தது.

- பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு பணிநாடுநர்களின் கல்வித் தகுதி மதிப்பெண்ணைக் கணக்கிடுவதற்கு Grade அடிப்படையில் வழங்கும் வெயிட்டேஜ் மதிப்பெண் குறித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 252, பள்ளிக் கல்வித் துறை, நாள் 5-10-2012-ஐ ரத்து செய்து, அதனை அறிவியல்பூர்வமாகக் கணக்கிடுவதற்கு ஆய்வு செய்து, திருத்திய ஆணை வழங்குமாறு தீர்ப்பளித்தது.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2018 ஜூன் 6

மேலும், இத்தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர்களால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் 707/2014-ன்மீது 22-9-2014 நாளிட்ட தீர்ப்பாணை, மேற்கண்ட 29-4-2014 நாளிட்ட தீர்ப்பினை உறுதி செய்தது.

சென்னை, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் W.P (MD) No.4558 & 2677/2014-ல் பெறப்பட்ட 25-9-2014 நாளிட்ட தீர்ப்பாணையில் பின்வரும் வகையில் தீர்ப்பு அளிக்கப்பட்டது:

- ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்ணில் இட ஒதுக்கீட்டு பிரிவு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவீதம் மதிப்பெண் தளர்வு அளித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 25, பள்ளிக் கல்வித் (ஆதேவா) துறை, நாள் 6-2-2014-ஐ ரத்து செய்தது.

மேற்கண்ட நிலையில், 29-4-2014 ஆம் நாளிட்ட சென்னை, உயர் நீதிமன்ற தீர்ப்பாணையின் அடிப்படையில், பணிநாடுநர்களின் கல்வித் தகுதிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண்களைக் கணக்கிடுவதற்கு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 71, பள்ளிக் கல்வித் (ஆ.தே.வா.) துறை, நாள் 30-5-2014-ல் வெளியிடப்பட்டது. அதன்படி, விழுக்காட்டு அடிப்படையில் மதிப்பெண் கணக்கிடுவதற்குப் பதிலாக, மாணவர்கள் அந்தந்தக் கல்வித் தகுதிக்கான சான்றிதழில் பெற்றுள்ள மதிப்பெண்களுக்கு இணையாகக் கணக்கிட்டு வெயிட்டேஜ் மதிப்பெண் கணக்கிடப்படும்.

மேலும், மேற்தெரிவிக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் 707/2014-ன்மீது, 22-9-2014 ஆம் நாளிட்ட தீர்ப்பாணை மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் W.P (MD) No.4558 & 2677/2014-ல் பெறப்பட்ட 25-9-2014 ஆம் நாளிட்ட தீர்ப்பாணை ஆகிவற்றை எதிர்த்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தனித்தனியாக மேல்முறையீடு செய்யப்பட்டதில், தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு சார்ந்த அனைத்து வழக்குகளையும் இணைக்குமாறு உச்ச நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டதன் அடிப்படையில், இதுசார்ந்த அனைத்து வழக்குகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, சிறப்பு அனுமதி (C) மனு எண் 29245/2014-ல், 9-11-2016 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட தீர்ப்பில், அரசாணை (நிலை) எண் 25, பள்ளிக் கல்வித் துறை, நாள் 6-2-2014 மற்றும் அரசாணை (நிலை) எண் 71, பள்ளிக் கல்வித்

துறை, நாள் 30-5-2014 ஆகிய இரண்டு அரசாணைகளும் நிலை நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது. அதனடிப்படையில், ஆசிரியர் தகுதித் தேர்வானது 29-4-2017 மற்றும் 30-4-2017 அன்று நடத்தப்பட்டு, 30-6-2017 அன்று இணையதளத்தில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. இந்தத் தேர்வில் தாள்-I-ல் 16,217 நபர்களும், தாள்-II-ல் 18,769 நபர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில் தாள்-II-ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்புப் பணி நடைபெற்று முடிந்துள்ளது. தாள்-I-ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் சரிபார்க்கப்படவில்லை.

ஆசிரியர் தேர்வு வாரியம் 2017 ஆம் ஆண்டுக்கு முன்பு நடத்திய தகுதித் தேர்வுகளில் தாள் I மற்றும் தாள் II-ல் முறையே 42,724 மற்றும் 52,646 நபர்கள் தேர்ச்சி பெற்று, அதன் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பணிக்கு முறையே 12,259 மற்றும் 20,177 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு 2013 தாள்-I-ல் தேர்ச்சி பெற்றவர்களில் 1,793 நபர்கள் அக்டோபர் 2014-க்கு முன்பும், 800 நபர்கள் அக்டோபர் 2014-க்கு பின்பும் இடைநிலை ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர். மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு 2013 தாள்-II மற்றும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு 2014-ல் தேர்ச்சி பெற்றவர்களில் 10,817 நபர்கள் அக்டோபர் 2014-க்கு முன்பும், 597 நபர்கள் அக்டோபர் 2014-க்கு பின்பும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

மேலும், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு 2014-2015 முதல் 2017-2018 வரை போட்டி எழுத்துத் தேர்வுமூலம் 4,156 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும், 643 கணினி பயிற்றுநர்களும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு 36 முதுநிலை விரிவுரையாளர்களும், 84 விரிவுரையாளர்களும், 19 இளநிலை விரிவுரையாளர்களும் என ஆக மொத்தம் 4,938 பணியிடங்களுக்கு பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்கண்ட நிலையில், ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) என்பது ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்கான ஒரு தகுதித் தேர்வு மட்டுமே ஆகும். ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிய இயலும். மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் சுயநிதிப் பள்ளிகளில் ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றவும் வாய்ப்பு உள்ளது.

அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரை, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது என்பது, ஆண்டுதோறும் பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வித் துறையில் ஏற்படும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிட மதிப்பீட்டைக் கணக்கிட்டு, அந்தக் காலிப் பணியிடங்களுக்கேற்ப, பணிநாடுநர்களது ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண், தேர்வர்கள் பெற்ற கல்வித் தகுதிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண் மற்றும் இன சுழற்சி முறை அடிப்படையில் தரவரிசை (Ranking) நிர்ணயிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் மேற்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் அடுத்த முறை ஆசிரியர் நியமனத் தேர்வில் கலந்துகொண்டு காலிப் பணியிடங்களுக்கு ஏற்ற வகையில் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றால் மட்டுமே அரசுப் பள்ளிகளில் நியமனம் செய்ய வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆசிரியப் பணியே அறப்பணி, அதற்கே உன்னை அர்ப்பணி' என்கின்ற உணர்வோடு, தமிழகத்திலே இலட்சக்கணக்கான இளைஞர்கள், பட்டதாரிகள், பட்டயப் படிப்பு முடித்தவர்கள் ஆசிரியராகப் பணியாற்ற காத்திருக்கின்றனர். அவர்களுடைய இலட்சியக் கனவுகளை நனவுகளாக மாற்றக்கூடிய ஓர் அமைப்புதான் ஆசிரியர் தேர்வு வாரியம். ஆனால், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்தவொரு பட்டதாரி ஆசிரியரோ அல்லது இடைநிலை ஆசிரியரோ ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக வேலைவாய்ப்பினைப் பெறாதிருக்கக்கூடிய நிலை இன்றைக்கு கவலையளிப்பதாக இருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின்படி, பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 2013 ஆம் ஆண்டு 42,124 பேரும், 2014 ஆம் ஆண்டு 944 பேரும் இந்தத் தேர்விலே வெற்றி பெற்றுள்ளனர். அவர்களிலே, வெறும் 11,369 பேர்தான் வேலை நியமனம் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று, 2017 ஆம் ஆண்டு 18,769 பேர் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவருக்குக்கூட வேலைவாய்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. அதாவது, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக ஒரு பட்டதாரி ஆசிரியர்கூட நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது.

2018 ஜூன் 6] [திரு. தங்கம் தென்னரசு]

அதேபோன்று, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 2013 ஆம் ஆண்டு 30,592 பேர் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களில், நியமனம் செய்யப்பட்டவர்கள் 1,858 பேர்தான். 2017 ஆம் ஆண்டு 16,000 பேர் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூட பணியில் நியமிக்கப்படவில்லை. அதாவது, 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கிடையே 2017 ஆம் ஆண்டு, TRB *தேர்வு எழுதி வெற்றி பெற்ற யாருக்குமே, அதற்கான சான்றிதழ்கள் இன்னும் வழங்கப்படாத நிலை இருக்கிறது. இதன் காரணமாக, அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளிலே சேரக்கூடிய பணி நாடுநர்கள், ஆசிரியர்களாக அங்கே நியமனம் செய்யப்படுகிறபோது, அவர்களுக்கு இந்தச் சான்றிதழ் என்பது அவசியமாக இருக்கிறது. இந்தச் சான்றிதழ்கள் அவர்களுக்குக் கிடைக்கப்பெறாத நிலையில், அவர்கள் பணியிலே சேர முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதுகுறித்து, நான் விசாரித்தபோது, சான்றிதழ்களை* re-scanning *செய்யும் பணி நடைபெற்று வருகிறது என்று என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விரும்புவது, இதுவரை எத்தனை சான்றிதழ்கள்* re-scanning *செய்யப்பட்டுள்ளன, இன்னும் எத்தனை சான்றிதழ்கள்* re-scanning *செய்யப்பட வேண்டும்,* re-scanning *பணிகளை முடித்து, எப்போது அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவீர்கள் என்பதாகும்.*

இன்னொன்று, நேற்றைக்குக்கூட, சிறப்பு ஆசிரியர்கள் பள்ளிக் கல்வி வளாகத்தின் முன்பு போராட்டம் நடத்தினார்கள். கலை, ஓவியம் போன்ற சிறப்பு ஆசிரியர்களுக்கான தேர்வு 2017 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதற்கான தேர்வு முடிவுகள் இன்னும் வரவில்லை. அதேபோன்று, வேளாண் பட்டதாரிகளுக்கான AEO *நியமனம் மற்றும் கணினி ஆசிரியர்கள் நியமனத்திற்கான தேர்வு குறித்து கடந்த ஆண்டு அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று வரை அதற்கான* notification *வரவில்லை. அதுவும் வெளிவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

நான் விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், குறிப்பாக weightage *முறை பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது என்னவெனில், இந்த* weightage *முறையை தயவுசெய்து நீக்குங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

[திரு. தங்கம் தென்னரசு] [2018 ஜூன் 6

பிற்பகல் 12-05

இந்த weightage முறையினாலேதான் இந்த நாட்டிலே பல இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு இன்றைக்கு இந்த வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகப் பலவிதமான technicalities இருக்கின்றன. நீதிமன்றத் தீர்ப்புகளை நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் மேலாக natural justice-இயற்கை நியதி இருக்கிறது. தயவுசெய்து இந்த weightage முறையை நீக்கி, அதன்வாயிலாக இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு TRB தேர்வின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரையிலும், மிக விரைவிலேயே அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 2013 ஆம் ஆண்டு TET தேர்விலே இடைநிலை ஆசிரியர்கள் 42,724 பேர் தேர்ச்சி பெற்றார்கள். அதில் ஆசிரியர் பணியிடங்கள் பெற்றவர்கள் 13,781 பேர். ஆகவே, பணியிடம் பெற்றவர்கள் போக, மீதமிருக்கின்றவர்களுக்கு 7 ஆண்டுக்காலம் அவகாசம் இருக்கிறது. அதன் அடிப்படையிலே அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வைப் பொறுத்தவரையிலும், 52,646 பேர் தேர்ச்சி பெற்றார்கள். அதிலே பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் 20,275 பேர். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலும், 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற TET தேர்வுமூலம் 34,056 பேர் ஆசிரியர்களாகப் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற 61,314 பேர் தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்று, பணியிடம் கிடைக்காமல் இருக்கின்றார்கள். அவர்கள் எழுதியது தகுதித் தேர்வே தவிர, போட்டித் தேர்வு அல்ல. அவர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்க முடியுமே தவிர, அவர்கள் அத்தனை பேருக்கும் ஆசிரியர் பணியிடம் அளிப்பது என்பது சாத்தியம் இல்லாதது.

2018 ஜூன் 6] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இருந்தாலுங்கூட, தேர்ச்சி பெற்றவர்களுக்கு 7 ஆண்டுக்காலம் அவகாசம் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், அவர்கள் மீண்டும் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதுநிலை ஆசிரியர்கள் 4,156 பேர் ஆசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கணினி பயின்ற ஆசிரியர்கள் 643 பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். முதுநிலை விரிவுரையாளர்கள் 36 பேர், விரிவுரையாளர்கள் 84 பேர், இளநிலை விரிவுரையாளர்கள் 19 பேர் என்று 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு 4,938 பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சிறப்பாசிரியர்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு நேற்றையதினமே ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. விரைவில் அவர்களுக்கு அந்தப் பணிகளுக்கான தேர்வு முடிவுகளை அரசு வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிறதென்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு காரணம் TRB-லே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. ஆகவே, அனைத்து நிலைகளையும் காவல் துறையிடத்திலே நாங்கள் ஒப்படைத்த காரணத்தின் அடிப்படையிலேதான் அதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, விரைந்து அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அனைத்துப் பணிகளையும் இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

Weightage முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அரசின் ஆய்விலே இருக்கிறது. மிக விரைவிலே அதைப்பற்றி நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, 7 ஆண்டுக்காலம் அவகாசம் இருக்கின்ற நிலையில் அவர்கள் மீண்டும் அந்தத் தேர்வை எழுதுவதற்கு, weightage இல்லாமல் எழுதுவதற்கு வேண்டிய பணிகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் முதலிலேயே நிறைய கேள்விகள் கேட்டுவிட்டீர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: *ஒரு கேள்விதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, முடியுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவரிடத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாற்றுத் திறனாளிகளுக்காக 4 சதவிகித இட ஒதுக்கீட்டோடு அவர்களுக்குப் பணி தர வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை ஓர் உத்தரவை அளித்திருக்கிறது. அதனை 3 மாத காலத்திற்குள்ளாக நிறைவேற்ற வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறது. எனவே, மாற்றுத் திறனாளிகளை முக்கியமாக கருத்திலே கொண்டு, அவர்களுக்கான தேர்வையும் விரைவில் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய அரசு மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்காகவே 4 சதவிகித இட ஒதுக்கீடு என்ற முறையில் முதுநிலைப் பட்டதாரிகளை நாம் தேர்வு செய்து, 131 பேருக்கு பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆக, 3 மாத காலத்திலே இந்தத் தேர்வுகள் முடிந்து ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையிலே இருந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதையும் அரசு பரிசீலித்து, என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையிலும் மனிதநேயத்தோடு ஆசிரியப் பெருமக்களுடைய நலன் காக்கின்ற அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.*